
William Jones, 1789

St. Stephen
C.M.




## பாமாலை 180 நீ குருசில் மாண்ட

1 நீ குருசில் மாண்ட கிறிஸ்துவை
அறிக்கை பண்ணவும்
அஞ்சாவண்ணம் உன் நெற்றிமேல்
சிலுவை வரைந்தோம்

2 கிறிஸ்துவின் மாண்பைக் கூறவே
வெட்காதபடிக்கும்
அவரின் நிந்தைக் குறிப்பை
உன்பேரில் தீட்டினோம்

3 நீ கிறிஸ்துவின் செங்கொடிக்கீழ்
துணிந்து நிற்கவும்
சாமட்டும் நற்போராட்டத்தை
நடத்தும்படிக்கும்

4 நீ கிறிஸ்து சென்ற பாதையில்
நேராக ச் செல்லவும்
நிந்தை எண்ணாமல் சிலுவை
சகித்தீடேறவும்

5 கிறிஸ்துவின் அடையாளத்தை
சபை முன்னே பெற்றாய்
நீ அவர் குருசைச் சுமந்தால்
பொற்கிரீடம் பூணுவாய்